2025 நவம்பர் 14 ஆம் திகதி

# ஊடக அறிவித்தல்

**மலையகத் தமிழர்களை கௌரவமான முறையில் நல்லடக்கம் செய்வதற்கான உரிமை கோரும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க உயர் நீதிமன்ற மனு தாக்கல்**

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று இலங்கை உயர்நீதிமன்றத்தில் முக்கிய அடிப்படை மனித உரிமைமீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது மலையகத் தமிழ் சமூகத்தின் நீண்ட கால சமத்துவத்திற்கான போராட்டத்தில் மற்றுமொறு மைல் கல் எனக் கருத முடியும். இந்த மனுவானது, மலையகத் தமிழர்களும் கௌரவமான முறையில் நல்லடக்கம் செய்வதற்கான உரிமையை சட்டப்பூர்வமாக அங்கீகரிக்குமாறும், சுயாதீனமாக பொது மயானப் பயன்பாட்டு உரிமையையும் உறுதி செய்யுமாறு கோரி இம் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பல தலைமுறைகளாய் பெருந் தோட்டச் சமூகமாக அனுபவித்துவரும் தமது உயிரிழந்த உறவுகளை தற்காலிகமான அல்லது மயானமாக நிர்ணயிக்கப்படாத தோட்ட பயிர் நிலங்களில் அடக்கம் செய்யும் நிலை தொடர்கின்றது. மலையக வரலாற்றில் பல மயான காணிகள் தேயிலை, இரப்பர், தேங்காய் போன்ற வணிகப் பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தப்பட்டுள்ளமை மற்றும், மயானங்களை சுத்திகரித்தல் ஆகியன அடிப்படை மனித உரிமை மீறலாக இந்த மனுவில் முக்கிய குற்றச்சாட்டாக முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவானது இன்ஸ்ரிடியூட் ஃபார் பீப்பிள் என்கேஜ்மென்ட் அன்ட் நெட்வெர்க்கிங் (iPEN) நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு. ஜீவரத்னம் சுரேஷ்குமார் மற்றும் ஊடகவியளார் திரு. செல்வராஜா இராஜசேகர் தலைமையில் நாட்டின் பல பகுதிகளிலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புத் தலைவர்கள் உள்ளிட்ட ஒன்பது துணிச்சலான மனுதாரர்கள் இணைந்து தாக்கல் செய்துள்ளனர். அரசாங்கம் அவசியமான மயான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கத் தவறுவதன் மூலம், மலையகத் தமிழர் சமூகத்திற்கான சமமான சேவை அணுகல் உரிமை மற்றும் மனித கண்ணியம் ஆகியன தொடர்ச்சியாக மறுக்கப்பட்டு வருவதாக வலியுறுத்தப்படுவதோடு, இது இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரைகளான 12 (சமத்துவம்), 10 (மனித கௌரவம்), 14(1)(ய) ஆகிய உறுப்புரைகளை மீறுவதாகவும் இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், குருநாகல், கண்டி. களுத்துறை, கொழும்பு, நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் பதிவுசெய்யப்பட்ட பல்வேறு சம்பவங்களை இந்த மனு வெளிப்படுத்துவதோடு, சில சந்தர்ப்பங்களில் துயரில் இருக்கும் குடும்பங்கள், தங்களுக்கு அண்மையில் எந்த அங்கீகரிக்கப்பட்ட இடுகாடுகளும் இல்லாததால், 22 கிலோமீட்டர் வரை தொலைவில் உள்ள பொது இடுகாடுகளுக்குச் சென்று அடக்கம் செய்ய வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளதாக இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மனு குறித்து கருத்து தெரிவித்த iPEN நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் திரு. சுரேஷ்குமார் அவர்களின் கருத்து, ''இது ஒரு சட்ட ரீதியான மனு மாத்திரமல்ல மனித அடிப்படை உரிமை, மனித கௌரவத்தை பாதுகாக்க மேற்கொண்டுள்ள முயற்சி, பல தலைமுறைகளாக மலையகத் தமிழர்கள் கட்டமைக்கப்பட்ட முறையில் நிர்வாக புறக்கணிப்பை அனுபவித்து வந்துள்ளனர். இன்று அவர்களுக்கு மரணத்திற்குப் பின்பும் அமைதியாக சமாதியடையும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு குடிமகனும், அவர்களின் சமூகப் பின்னணி, சமூக நிலை, அல்லது வாழும் இடம் என்ற எந்தவித பாரபட்சமும் இன்றி பாதுகாப்பான, அங்கீகரிக்கப்பட்ட மற்றும் இறுதியும் நிரந்தரமுமான மயானத்திற்குரிய உரிமை உடையவர்கள் என்பதை உயர் நீதிமன்றம் உறுதிப்படுத்த வேண்டும் என்பதே எங்களின் வேண்டுகோள். இந்த மனுவானது, நீதி மற்றும் உண்மையான சமத்துவத்தைப் பெறுவதற்கான ஒரு ஆழமான மைல்கல்லாகும். குறிப்பாக, நாடு முழுவதும் உள்ள ஒவ்வொரு சமூக இடுகாடுகளும் அந்தந்த உள்ளூராட்சி அமைப்புகளின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும் என்று இம்மனுவில் வலியுறுத்தப்படுகிறது. இனம், மதம் அல்லது சமூகப் பின்னணி எதுவாக இருந்தாலும் அனைத்து குடிமக்களுக்கும் சமமான, கண்ணியமான மயான அல்லது இடுகாடுகள் உறுதி செய்யப்பட வேண்டும்''

2025 நவம்பர் 14 ஆம் திகதி

இந்த மனுவில் ஏழு பிரதிவாதிகள் பெயரிடப்பட்டுள்ளதோடு, அவர்களில் பொது நிர்வாக அமைச்சு, பெருந்தோட்டக் கைத்தொழில், தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு, அமைச்சர்கள், செயலாளர்கள் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரும் உள்ளடங்குகின்றனர்.

ஊடகத் தொடர்புகளுக்கு:

077 991 5459 அல்லது மின்னஞ்சல் ஊடாக: ipenanka@gmail.com

33/9A, Buthgamuwa Road, Rajagiriya T.P - 0114701119 E-mail : ipenlanka@gmail.com